2007 ஏப்ரல் 4] [கலைஞர் மு. கருணாநிதி]

“பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் அரிசியின் விலையைக் குறைத்து, இந்தியாவிலேயே மிகக் குறைவான விலையில், இரண்டு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி வழங்கி வருகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) இதன் காரணமாக, கடந்த பத்து மாதங்களாக வெளிச்சந்தையில் அரிசியின் விலை உயராமல் கட்டுப்பாட்டிற்குள் உள்ளது. இதுபோன்றே, பொது மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் அத்தியாவசிய உணவுப் பொருட்களான பருப்பு வகைகள், சமையல் எண்ணெய் ஆகியவற்றின் விலைகளைக் கட்டுப்படுத்தி, ஏழை, நடுத்தரக் குடும்பங்களைப் பாதுகாக்கும் உடனடித் தற்காலிக நடவடிக்கையாக, அப்பொருட்களை அரசே கொள்முதல் செய்து, நியாய விலைக் கடைகள் மூலமாகப் பொது மக்களுக்கு வழங்க முடிவு செய்யப்பட்டது” என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பையொட்டி, தற்போது பாமாயில், துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, ரவை, மைதா ஆகிய உணவுப் பொருட்களைக் கொள்முதல் செய்து, நியாய விலைக் கடைகள்மூலமாக விநியோகம் செய்யும் திட்டம் தமிழ்ப் புத்தாண்டு நாளான *14-4-2007* அன்று (மேசையைத் தட்டும் ஒலி) சென்னை மாநகரத்திலே தொடங்கப்பட்டு, இத்திட்டம் படிப்படியாக மே மாதம் முதல் வாரத்திலிருந்து தமிழகத்திலே உள்ள அனைத்து நியாய விலைக் கடைகளுக்கும் விரிவுபடுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் *10-40*

3. அறிவிப்புகள்

(அ) பார்வையாளர் மாடத்திலிருந்து பேரவை நடவடிக்கைகளைக் கண்ணுறும் அமெரிக்கத் தூதர் மற்றும் அமெரிக்கத் தூதரகத்தின் உயர் அலுவலர்களுக்கு வரவேற்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. (குறுக்கீடுகள்) முதலில் உட்காருங்கள். பேரவைக்கு ஓர் அறிவிப்பு. சென்னையில் உள்ள (குறுக்கீடுகள்) உட்காருங்கள் சார். நான் கூப்பிட்டால்தானே? (குறுக்கீடுகள்) உட்காருங்கள் முதலிலே. நான் கூப்பிடுகிறேன். இதை முடித்துவிட்டு நான் கூப்பிடுகிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) பேரவைக்கு ஓர் அறிவிப்பு. சென்னையில் உள்ள அமெரிக்கத் தூதர் Thiru. David T. Hopper மற்றும் அமெரிக்கத் தூதரகத்தின் உயர் அலுவலர்கள் பார்வையாளர் மாடத்தில் அமர்ந்து,

பேரவை நடவடிக்கைகளைப் பார்வையிட வந்துள்ளார்கள். அவர்களை வரவேற்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

I welcome the dignitaries from the U.S. Consulate, Mr. David T. Hopper, Consul-General for South India, Mr. Rohit Nepal, Consul for Economic and Political Affairs, Mr. George Mathew, Economic Specialist and Mr. Finny Jacob, Political and Economic Specialist who are now witnessing the proceedings of our House. (Thumping of desks)

4. சிறப்புக் கவன ஈர்ப்பு

காவிரி டெல்டா பகுதியில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் செயல்படாதது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *1-4-2007 முதல் காவிரி டெல்டா பாசனப் பகுதியான தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் நேரடிக் கொள்முதல் நிலையங்கள்மூலம் நெல் கொள்முதல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் பொள்ளாச்சி வி. ஜெயராமன், ஆர். வைத்திலிங்கம், அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, வை. சிவபுண்ணியம் ஆகியோர் ஒத்திவைப்புத் தீர்மான அறிவிப்புகள் கொடுத்திருக்கிறார்கள். இதனைச் சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்பாக எடுத்துக்கொள்கிறேன். இது குறித்து, அ.தி.மு.க. சார்பாக மாண்புமிகு உறுப்பினர் ஆர். வைத்திலிங்கம் அவர்கள் உரையாற்றுவார்கள்.*

*** திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 1 ஆம் தேதியிலிருந்து தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் நேரடிக் கொள்முதல் நிலையங்களில் நெல் கொள்முதல் செய்யப்படவில்லை. விவசாயிகளுடைய உற்பத்திச் செலவு அதிகமாகி, விளைபொருட்களுக்குக் கட்டுப்படியான விலை கிடைக்காத நிலையில், அவர்களுடைய நெல்லைக் கொள்முதல் செய்யாமல், இந்த மூன்று நாட்களாக விவசாயிகளிடம் ஒரு பதட்டம் ஏற்பட்டிருக்கின்றது.

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்"

என்ற காலம் போய், இன்றைக்கு விவசாயிகள் மற்றவர்களைத் தொழுகின்ற காலம் நடந்துகொண்டிருக்கிறது. மேலும், கொள்முதல்